28th September 1955]

Tamil College at Mailam.

* 2524 *Q.*—Sri M. VENUGOPALA GOUNDER: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount of grant given to the Tamil College at Mailam village, Tindivanam taluk, South Arcot district, for 1952–53 and 1953–54; and

(*b*) whether it is a fact that Harijan students are denied admission in the hostel attached to that college?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) A total grant of Rs. 3,840 and Rs. 3,573 was paid to the Tamil College at Mailam for the years 1952–53 and 1953–54, respectively.

(*b*) No Sir.

Sri M. VENUGOPALA GOUNDER: சர்க்கார் மானியம் பெறும் மைலம் தமிழ் கல்லூரியில் ஹரிஜன மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். இனிமேலாவது சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்று உத்திரவு போடுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: நான் பதில் அப்படிச் சொல்லவில்லை. ஹரிஜன மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள இதுவரையிலும் மறுக்கப்படவில்லை என்று தான்சொன்னேன்.

Sri A. RATNAM: அந்தக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள் ? அதில் எத்தனை பேர்கள் ஹரிஜனங்கள் என்பதைக் கூற முடியுமா ?

The Hon Sri C. SUBRAMANIAM: I am sorry I do not have the figures now but I have got a report that the Harijan students were not denied admission to the hostel attached to that College and the management has no objection to admit Harijan students in the hostel if they come.

Sri K. V. RAMASWAMI: மைலம் கல்லூரியில் இருக்கக் கூடிய ஹாஸ்டலில் இதுவரையிலும் எத்தனை ஹரிஜன மாணவர்கள் இருக்கிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் கூற முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: என்னிடத்தில் தகவல் இல்லை.

Sri M. JAGANNATHAN: மைலம் தமிழ் கல்லூரியின் விடுதியில் ஹரிஜனங்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை என்பது உண்மை. ஆகவே ஹரிஜன மாணவர்களை விடுதியில் சேர்ப்பதற்கு முயற்சி எடுப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அவர்கள் அளித்திருக்கும் பதிலிலிருந்து ஹரிஜன மாணவர்களை விடுதியில் சேர்த்துக் கொள்ளத் தயாராய் இருப்பதாகத்தான் தெரிகிறது. ஆனால் அவ்வாறு யாராவது போய் அவர்களை எடுத்துக் கொள்ளமாட்டோம் என்பதாக மறுத்தார்களானால் அதுபற்றிய விஷயத்தை சர்க்காருக்குத் தெரியப்படுத்தினால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

Sri A. RATNAM: ஹாஸ்டல்களுக்கு அனுமதி கொடுக்கும்போது பத்து சத விகிதம் மாணவர்கள் ஹரிஜன வகுப்பிலிருந்து சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விதி இருப்பது உண்மையா ? அப்படியிருந்தால் இம்மாதிரி

[28th September 1955

தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற ஹாஸ்டல்களிலும் 10 சத விகிதம் ஹரிஜன மாணவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற விதியை வற்புறுத்தக் கூடாதா ?

12 noon. THE HON. SRI C. SUBRAMANIAM : பத்து சத விகிதம் கூட இல்லை. இன்னும் அதிகமாகவே ஹரிஜன மாணவர்களை சேர்த்துக் கொள்ளச் செய்ய வேண்டுமென்பது தான் நோக்கம். ஆனால் தனிப்பட்டோருடைய ஸ்தாபனத்தில் நாம் அதிகமாகக் குறுக்கிடுவது கிடையாது. ஆனால் ஹரிஜன மாணவர்களையே சேர்த்துக் கொள்வதில்லை என்கின்ற கொள்கை யாராவது வைத்துக் கொண்டிருந்தால் அந்தத் தடையை நீக்குவதற்கு அரசாங்கம் தலையிட்டு எல்லா ஏற்பாட்டையும் செய்யும்.

SRI A. IYANAR : முத்தமிழ் க்ஷேத்திரமான மதுரையில் ஒரு தமிழ் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மூலக் கேள்வியிலிருந்து இந்தக் கேள்வி பிறப்பதில்லை. இருந்தாலும் கனம் அங்கத்தினர் அவர்களே அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

SRI S. R. ARUMUGAM : தனிப்பட்டோருடைய ஸ்தாபனங்களில் சர்க்கார் தலையிடக்கூடாதென்று சொல்லுகிறார்கள். அந்தத் தனிப்பட்டோருடைய ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்வதுண்டா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் உதவிபெறும் ஸ்தாபனங்களில் ஹரிஜனங்களை சேர்த்துக் கொள்ளக்கூடாதென்ற தடை விதிக்கக்கூடாதென்று உத்திரவு இருக்கிறது. அந்த விதியை சர்க்கார் இப்பொழுது அமுல் நடத்தியும் வருகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

SRI S. R. ARUMUGAM : மைலம் கல்லூரியில் இந்நாள் வரையிலும், ஹரிஜனங்கள் செல்வதில்லை என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஹரிஜன மாணவர்கள் அந்த கல்லூரியில் போய்ச் சேர்ந்து படிப்பதற்குத் தூண்டுதலாக சர்க்கார் ஏதாவது திட்டமிட்டு வழி வகைகள் செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் சொன்ன பதிலை அங்கத்தினர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. எத்தனை ஹரிஜனங்கள் அங்கே இருக்கிறார்கள் என்று கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் அதுபற்றிய தகவல் இல்லையென்று சொன்னேன். ஆகையால் இனிமேல் எந்த ஹரிஜன மாணவராவது அங்கே சென்று அவர்கள் சேர்த்துக் கொள்ள முடியாது என்று சொன்னால் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கும்.

MR. SPEAKER : With the permission of the House, I will extend the time of the question hour by about 15 minutes.

Aerial survey of Malabar forests

* 2525 *Q.*—SRI T. C. NARAYANAN NAMBIAR (on behalf of Sri V. R. Krishna Ayyar) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received any representation this year from any Member of the Legislative Assembly asking for an aerial survey of Malabar forests; and

(*b*) whether the Government have taken any steps in that direction?